# பூஜாபிட்டிய பிரதேச சபை

## கண்டி மாவட்டம்

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 மார்ச் 30 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2012 ஏப்ரல் 05 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 மே 30 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் காணப்படும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள பூஜாபிட்டிய பிரதேச சபையின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது என்னால் அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 139,400 பெறுமதியான 2 கணனிகளும், மடிக்கணனியும் ஒரு புரொஜெக்டரும் நிலையான சொத்தாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) 09 நூலகங்கள் மற்றும் முன்பள்ளிக் கட்டிடங்களின் கட்டிடங்களின் பெறுமதி கணிப்பிடப்பட்டு காணி, கட்டிடக் கணக்கில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 வீத வரி

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பிரதேச சபையின் வீதவரி அறவிடப்படாத அங்கும்புர மற்றும் பட்டுகொட பகுதியின் 7 அபிவிருத்திப் பகுதிகளுக்காக வீத வரி அறவிடப்படுவதற்கு 2010 ஆகஸ்ட் 30 ஆம் திகதிய பொதுக் கூட்டத்தின் அவதானிப்பின் படி உள்ளூராட்சி ஆணையாளரால் அப் பகுதி வீத வரி அறவிடப்படுவதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், வீத வரி விதிக்கப்படுவது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் சபையால் தாமதமான காரணத்தால் வரி அறவிடப்படுவதற்கு முடியாதிருந்தது.

(ஆ) மேற்குறித்த (அ) விடயத்திற்கு மேலதிகமாக 2010 ஏப்ரல் 29 ஆம் திகதி பொதுக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானித்தில் 7 பிரதேசங்களில் வீதவரி அறவிடப்படுவதற்காக 2010 யூலை 16 ஆம் திகதிய வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருந்த போதிலும் சபையால் 2011 ஆம் 2012 ஆம் ஆண்டுகளுக்காக அத் தீர்மானப் பிரதேசங்களிலிருந்து வீதவரி அறவிடப்பட்டிராத காரணத்தால் சபைக்குக் கிடைக்க வேண்டிய வீத வரி வருமானம் பெறப்பட்டிருக்கவில்லை.

(இ) சபை அதிகாரப்பகுதியில் வீதவரி அறவிடப்படும் பகுதிகளுக்காக வீதவரி அறவீட்டு சதவீதம் 2007 ஆம் ஆண்டில் மீட்கப்பட வேண்டிய போதிலும் 2013 மார்ச் 31 ஆம் திகதியில் உள்ளவாறும் மேற்கொள்ளப்பட்டிராமையால் 6 ஆண்டுகளாக சபைக்குக் கிடைக்கப்பெறக்கூடிய அதிகரிக்கும் வீதவரி வருமானம் கிடைக்கப்பெறாது போயிற்று.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) உள்ளகக் கணக்காய்வு

(இ) வருமான நிர்வாகம்

(ஈ) இருப்புக் கட்டுப்பாடு

(உ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு